# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

## <u>அ.வ.எண்.116/2010</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி. K. அம்பிகா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி 1 வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2020 ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 05.02.2020**

**பெயர் - ஜெயராமன்**

**த/பெ - மதுரை**

**வயது -**

**சாட்சி - DW2**

**விசாரணை தொடங்கும் நேரம் -03.15pm**

**<u>முதல் விசாரணை -</u>**

15.04.2015-ம் தேதியிட்ட கூடுதல் தலைமை செயலாளரின் உத்தரவின் நகல் பிசா ஆ11-ஆக குறியீடு செய்யப்படுகிறது. 08.03.2017-ம் தேதியிட்ட இந்து சமய அறநிலையத் துறையின் கடிதத்தின் நகல் பிசா ஆ12-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இரு ஆபணங்களும் வாதி தரப்பு வழக்கறிஞர் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணங்கள் என்றும், பதிலுரையில் குறிப்பிடப்படாத ஆவணங்கள் என்றும் ஆட்சேபனை தெரிவித்தார். மேற்படி ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை-

நான் வாதி அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்தில் தான் குடியிருந்து வருகிறேன். என் பெயரிலும் இதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கலாகி தள்ளுபடி செய்யப்பட்டு அதன் மேல் மேல்முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது. எனக்கு பிறகு இதே நீதிமன்றத்தில் 15

வழக்கிற்கு மேல் தாக்கல் செய்யப்பட்டு வாதிக்கு சாதகமாக சில வழக்குகள் ஒருதலைபட்சமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. என்படி வழங்கப்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பிற்கு எதிராக மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் என் பிரமாண வாக்கு மூலத்தில் தாவா சொத்து வாதி டிரஸ்டிக்கு உரிமையான சொத்து இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன். அது தவறு மீஞ்சூர் வரதராஜ பெருமாள் கோவிலின் கட்டுப்பாட்டில் உள்ள சொத்தாகும். வழக்கு சொத்து தண்ணீர் பந்தலுக்கு உரிமையான சொத்து என்று என் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிசா ஆ11 வாதி மோகணசுந்தர செட்டியார் தண்ணீர் பந்தல் அறக்கட்டளையின் தர்மா கர்த்தா என்று குறிப்பிட்டுள்ளதை எதிர்த்து சென்னை சேப்பாக்கம் நில நிர்வாக ஆணையாளரை நாடினோம். பிசா ஆ11-ல் மீண்டும் விசாரித்து மறு பரிசீலனை செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிசா ஆ12 வாதி பெயருக்கு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். பிசா ஆ12 08.03.2017 அன்று தான் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வழங்கப்பட்டுள்ளது. பிசா ஆ12 உள்ளபடி தக்கார் யாரும் தற்போது அறக்கட்டளையை நிர்வகிக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் வந்து இந்த வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார். உண்மையிலேயே அறநிலைய துறைக்கு சொந்தமான இருந்திருந்தால் வாதிக்கு தெரியப்படுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. இன்று வரையிலும் வருவாய்துறை ஆவணங்களின் தண்ணீர் பந்தல் அறக்கட்டளை என்று தான் உள்ளது. வழக்கின் பிரதிவாதி சட்டவிரோதமாக வாதியின் சொத்தில் குடியிருந்து வருவதால், சட்டவிரோதமாக குடியிருப்போருக்கு ஆதரவாக நான் சட்டவிரோதமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம் -03.29pm**